ரிதிமாலியத்த பிரதேசசபை
பதுளை மாவட்டம்
---------------------------

1. <u>நிதிக்கூற்று</u>

1.1 <u>நிதிக்கூற்று சமர்ப்பித்தல்</u>

2018 ஆம் வருடத்தின் நிதிக்கூற்று 2019 ஏப்பிரல் 18 ஆம் திகதி கணக்காய்வுக்கென அனுப்பி வைக்கப்பட்டிருந்ததுடன், அந்த நிதிக்கூற்று தொடர்பாக கணக்காய்வு அதிபதியின் அறிக்கை 2019 மே மாதம் 30 ஆம் திகதியும் விரிவான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2019 மே மாதம் 31 ஆம் திகதி தவிசாளருக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

1.2 <u>நிலைகள் தொடர்பில் கணக்கீடு செய்யப்பட்ட அபிப்ராயம்</u>

இந்த அறிக்கையில் நிலையை விளக்கிய அபிப்ராயம் தொடர்பாக விபரத்தை தரும் பகுதியில் குறிப்பிடப்பட்ட விடயங்களிலுள்ள விளைவுகள் தவிர்ந்த நிதிக்கூற்றுக்களில் 2018 ஆம் ஆண்டு டிசம்பர் 31 ஆம் திகதிக்கு ரிதிமாலியத்த பிரதேசசபையின் நிதி நிலைமை மற்றும் அத்தினத்துடன் நிறைவடையும் ஆணிடிற்கான அதன் நிதி செயற்பாடு பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கியல் விதிகளுக்கமைவாகவும், உண்மையானதும் நியாயமானதுமான நிலையினை பிரதிபலித்து நிற்கின்றமையே எனது அபிப்ராயமாகும்.

1.3 நிலைப்படுத்தப்பட்ட அபிப்ராயத்திற்கான அடிப்படை

(அ) கணக்கீட்டு ரீதியிலான குறைபாடுகள்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | கணக்கு கொடுப்பு அலுவலரின் கருத்துரைப்பு |
|---|---|---|---|
| | ------------------------------------------------ | ------------------ | ---------------------------- |
| (i) | மீளாய்வு செய்யப்பட்ட வருடத்தின் டிசம்பர் 31 ஆம் திகதிக்கு சபையின் பல்வேறு இயந்திரசாதனங்கள் 07 இன் மூலமான வழங்கப்பட்ட சேவைகளுக்காக கிடைக்க வேண்டிய ரூ.597,420 கணக்கில் உள்ளடக்கப்படவில்லை. | சரியாக கணக்கு தயாரிக்கப்படல் வேண்டும். | குறைபாடுகளை சரிசெய்துகொள்வதற்காக விடயத்திற்கு பொறுப்பான அலுவலர்களுக்கு அறிவுறுத்தல் விடுக்கப்பட்டுள்ளதாக, |
| (ii) | மீளாய்வு செய்யப்பட்ட வருடத்தின் 31 ஆம் திகதிக்கு மீளப்பெற்றுக்கொள்ள வேண்டிய உறுப்பினர் கொடுப்பனவு ரூ.600,000 கணக்கில் உள்ளடக்கப்படவில்லை. | சரியாக கணக்கு தயாரிக்கப்படல் வேண்டும். | குறைபாடுகளை சரி செய்வதற்கு விடயத்திற்கு பொறுப்பான அலுவலருக்கு அறிவுறுத்தல் விடுக்கப்பட்டது. |

(ஆ) <u>கணக்காய்விற்கு தேவையான எழுத்துமூல சாட்சி இல்லாமை</u>

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | கணக்குகொடுக்கும் அலுவரின் கருத்துரைப்பு |
|---|---|---|
| ------------------------------------------ | --------------------- | ---------------------------- |
| ரூ.77,539,502 பெறுமதியான மூன்று சொத்துக்கள் தொடர்பான உறுதி, வரைபடம், ஒப்படைப்பு உத்தரவு தொகை கணக்கெடுப்பு அறிக்கை மற்றும் காலம் தொடர்பான பகுப்பாய்வு என்பனவற்றை முன்வைக்காமையின் காரணமாக கணக்காயிவ்ன போது திருப்திகரமான உண்மைவெளிப்படுத்தலை காண முடியவில்லை. | கணக்காய்விற்கான சாட்சியங்களை கணக்குகளோடு சமர்ப்பிக்க வேண்டும். | சபைக்குரித்தான சொத்துக்களை இனங்காணுவதற்கும் அவ்வாறு இனங்கண்டதன் பின்னர் மதிப்பீட செய்து பெற்றுக்கொள்வதற்கு தேவையான நடவடிக்கையை மேற்கொள்வதற்கு விடய பொறுப்பு அலுவலருக்கு அறிவுறுத்தல் வழங்கப்பட்டுள்ளது. |

1.4 சட்ட ஒழுங்குவிதிகளுக்கும் முகாமைத்துவ தீர்மானங்களுக்கும் அமைவாக இல்லாமை

| சட்ட ஒழுங்குவிதிகளுக்கும் முகாமைத்துவ தீர்மானங்கள் மீது கவனம் செலுத்தல். | அமைவாக இல்லாமை | பரிந்துரை | கணக்கு கொடுக்கும் அலுவலரின் கருத்துரைப்பு |
|---|---|---|---|
| 1987 ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேசசபை சட்டத்தின் | | | |
| (i) 47,49(அ) பிரிவு | மீளாய்வுசெய்ப்பட்ட வருடத்தில் சபையின் அனுமதியில்லாது 13 கட்டிடங்கள் நிர்மானிக்கப்பட்டிருந்தன. | கட்டிடங்கள் நிர்மானிப்பதற்கு சபையின் அனுமதியை பெற வேண்டும். | தேவையான மேற்படி நடவடிக்கைகளை மேற்கொள்வதற்காக விடய அலுவலர்களுக்கு அறிவுறுத்தல் விடுக்கப்பட்டுள்ளது. |
| (ii) 159(1) பிரிவு | நிலுவை வருமானம் ரூ.3,398,317 அறவிடப்பட்டிருக்கவில்லை. | நிலுவை வருமானம் அறவிடப்பட வேண்டும். | நிலுவை வருமானம் அறவிடுவதற்கு விடய பொறுப்பு உத்தியோகத்தர்களுக்கு அறிவுறுத்தல் விடுக்கப்பட்டுள்ளது. . |
| (iii) 217 பிரிவு | சபையின் பயன்பாட்டுக்கு எடுக்கப்படும் சபைக்குரித்தான அனைத்து காணிகள் மற்றும் கட்டிடங்கள் தொடர்பான விபர பதிவேடு பேணப்படாதிருந்தது. | கட்டிடங்கள் தொடர்பான ஆதன பதிவேடு பேணப்பட வேண்டும். | விடயத்திற்கு பொறுப்பான அலுவலருக்கு அறிவுறுத்தல் விடுக்கப்பட்டுள்ளது. |

2. நிதி பற்றிய மீளாய்வு

2.1 நிதி பெறுபேறு

சமர்ப்பிக்கப்படும் நிதிக்கூற்றுக்கமைவாக மீளாய்வு செய்யப்பட்ட வருடத்தின் டிசம்பர் 31 ஆம் திகதியுடன் நிறைவடைந்த வருடத்திற்காக சபையின் மீண்டுவரும் செலவை **ரூபா** 3,822,307 விஞ்சிய வருமானம் ரூ.5,096,771 ஆக இருந்தது.

2.2 வருவாய் நிர்வாகம்

2.2.1 மதிப்பிடப்பட்ட வருமானம் பட்டியலிடப்பட்ட வருமானம் திரட்டப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம்

மீளாய்வுசெய்யப்பட்ட வருடத்திற்கும் நிறைவடைந்த வருடத்திற்கும் சமர்ப்பிக்கப்பட்ட மதிப்பிடப்பட்ட வருமானம், பட்டியலிடப்பட்ட வருமானம் திரட்டப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம் தொடர்பான தகவல்கள் கீழ்க்காட்டப்பட்டுள்ளது.

| | | 2018 | | | | 2017 | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | வருமான மூலம் | மதிப்பிடப்பட்ட வருமானம் | பட்டிடயலிடப் பட்ட வருமானம் | திரட்டப்பட்ட வருமானம் | டிசம்பர் 31 ஆம் திகதிக்கு நிலுவை | மதிப்பிடப்ப ட்ட வருமானம் | பட்டியலிட ப்பட்ட வருமானம் | திரட்டப்பட் ட வருமானம் | டிசம்பர் 31 ஆம் திகதிக்கு நிலுவை |
| | | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| (i) | ஏக்கர் வரி | 1,000 | 1,000 | 576 | 424 | 450 | 450 | - | 450 |
| (ii) | வாடகை | 1,515,000 | 1,515,000 | 832,807 | 682,193 | 206,065 | 206,065 | 73,697 | 132,368 |
| (iii) | வியாபாரவரி | 350,000 | 350,000 | 350,000 | - | 3,000 | 3,000 | - | - |
| (iv) | ஏனைய வருமானம் | 3,873,711 | 3,873,711 | 1,158,011 | 2,715,700 | 666,975 | 666,975 | 455,875 | 211,100 |
| | மொத்தம் | 5,79711 | 5,739,711 | 2,341,394 | 3,398,317 | 876,040 | 876,490 | 529,572 | 343,918 |

## 2.2.2 வருவாய் திரட்டுவது தொடர்பான செயலாக்கம்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கு கொடுக்கும் அலுவலரின் கருத்துரைப்பு |
|---|---|---|
| மீளாய்வுசெய்யப்பட்ட வருடத்தின் பட்டியலிடப்பட்ட ரூ.5,739,711 ஆன மொத்த வருமானத்தின் வருடம் நிறைவடையும் போது, ரூ.3,398,317 தொகை அறவிடாமல் இருந்ததுடன் மொத்த பட்டியலிடப்பட்ட வருமானத்தின் நூற்றுக்கு 59 ஆக இருந்தது. | நிலுவை வருவாயை அறவிடுதல் வேண்டும்.. | எதிர்ப்பார்க்கப்பட்ட மட்டத்தினை நெருங்குவதற்கு முறையான வேலைத்திட்டமொன்று தயாரிக்கின்றேன். |
| 05 ஆண்டுகளுக்கு மேற்பட்ட வரவேண்டிய மூலதன கொடை ரூ.4,577,685 மற்றும் நிலுவையிலுள்ள கடையறை வாடகை ரூ.420,782 ஆகவும் பொத்தமாக ரூ.4,998,467 ஆக அறவிடப்படாமல் இருந்தது. | வரவேண்டிய பணம் விரைவில் அறவிடப்பட வேண்டும். | உறுதிப்படுத்தல்களின் பின்னர் முறையான நடவடிக்கையை முறைக்கு அமைய செயலாற்றுமாறு விடயப்பொறுப்பு அலுவலருக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது. |

## 2.2.3 நீதிமன்ற தண்டப்பணம் மற்றும் முத்திரை கட்டணம்

### (அ) நீதிமன்ற தண்டப்பணம்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்குகொடுக்கும் அலுவலரது கருத்துரைப்பு |
|---|---|---|
| மீளாய்வுசெய்யப்பட்ட வருடத்தின் டிசம்பர் 31 ஆம் திகதிக்கு அறவிட வேண்டியுள்ள நிலுவை நீதிமன்ற தண்டப்பணமான ரூ.1,897,708 அறவிடவில்லை. | நிலுவை நீதிமன்ற தண்டப்பணம் அறவிடப்பட வேண்டும். | நிலுவை வருமானம் சேகரிப்பதற்கு முறையான வேலைத்திட்டமொன்றை தயாரிக்குமாறு வருமான பரிசோதகருக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது. |

(ஆ) முத்திரைக்கட்டணம்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்குகொடுக்கும் அலுவலரது கருத்துரைப்பு |
|---|---|---|
| மீளாய்வுசெய்யப்பட்ட ஆண்டின் டிசம்பர் 31 ஆம் திகதிக்கு அறவிடப்பட வேண்டியுள்ள நிலுவை முத்திரைக்கட்டணம் ரூ.1,804,613 அறவிடப்பட்டிருக்கவில்லை. | நிலுவை முத்திரை கட்டணம் அறவிடப்பட வேண்டும். . | நிலுவை வருவாயை திரட்டுவதற்கு முறையான வேலைத்திட்டமொன்றை தயாரிக்குமாறு வருமான பரிசோதகருக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது. |

3. செயற்பாட்டு மீளாய்வு

3.1 செயலாக்கம்

பிரதேசசபை சட்டத்தின் 03 ஆவது பிரிவின் கீழ் பொது மக்கள் சுகாதாரம் பொதுபயன்பாட்டு சேவைகள் மற்றும் பொதுப்பாதைகள் தொடர்பான விடயங்களை முறைமையாக்கல் மற்றும் பரிபாலனம் செய்தல் மக்களது வசதியான பயன்பாடு வசதி மற்றும் நலன்புரி சேவை ஆகியன சபையினால் நிறைவேற்றப்படுவது தொடர்பாக தெரியவந்த விடயங்கள் கீழ்க்காட்டப்பட்டுள்ளது.

(அ) உபவிதிகள்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்குகொடுப்பு அலுவலரின் கருத்துரைப்பு |
|---|---|---|
| பிரதேசசபை சட்டத்தின் 126 ஆவது பிரிவிற்கமைய பிரதானமாக நிறைவேற்ற வேண்டிய 30 கருமங்களுக்காக உபவிதிகளாக்கப்பட வேண்டியிருப்பினும் மீளாய்வுசெய்யப்பட்ட ஆண்டிற்காக டிசம்பர் 31 ஆம் திகதியாகும் போதும் ஆறு விடயங்கள் தொடர்பாக உபவிதிகள் ஆக்கப்படவோ ஏற்றுக்கொள்ளப்படவோ இல்லை. | உபவிதிகள் இல்லாத விடயங்களுக்காக உபவிதிகள் ஆக்கப்பட வேண்டும். | வாகன நிறுத்துவது தொடர்பான உபவிதிகள் உள்ளூராட்சி ஆணையாளருக்கு சமர்ப்பிக்கப்பட்டது. |

(ஆ) செயல் திட்டமிடல்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரைகள் | கணக்கு கொடுக்கும் அலுவரின் கருத்துரைப்பு |
|---|---|---|
| மீளாய்வுசெய்யப்பட்ட வருடத்திற்காக செயல்திட்டமிடல் வரைபு தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. | செயல் திட்டமிடல் அறிக்கை தயாரிக்கப்பட வேண்டும். | விடய பொறுப்பு அலுவலர்களுக்கு அறிவுறுத்தல் விடுக்கப்பட்டுள்ளது. |

(இ) நிலைபேறான அபிவிருத்தி இலக்குகள்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | கணக்கு கொடுக்கும் அலுவலரின் கருத்துரைப்பு |
|---|---|---|
| சபையானது ஐக்கிய நாடுகள் சபையின் நிலைபேறான அபிவிருத்தி நிகழ்ச்சி நிரல் 2030 தொடர்பாக அறிவினை பெற்றிருக்கவில்லையென்பதுடன், சபையுடன் தொடர்புபடுத்தப்படும் வகையில், இனங்காணப்பட்டுள்ள நிலைபேறான அபிவிருத்தி இலக்கு மற்றும் நோக்கை அளவிடுவதற்காக குறிக்காட்டிகள் இனங்காணப்படவில்லை. | நிலைபேறான அபிவிருத்தி இலக்குகள் மற்றும் நோக்கங்கள் தொடர்பான அளவீட்டை செய்வதற்கான குறிக்காட்டிகளை இனங்கண்டு அதற்கிணங்க ஆண்டுரீதியான இலக்குகளை அடையும் விருத்தி விகிதத்தை அளவிட வேண்டும். | இது தொடர்பாக நடவடிக்கையெடுக்குமாறு விடயத்துக்கு பொறுப்பான அலுவலருக்கு அறிவுறுத்தல் விடுக்கப்பட்டுள்ளது. |

3.2 மனித வள முகாமைத்துவம்

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கு கொடுக்கும் அலுவலரின் கருத்துரைப்பு |
|---|---|---|---|
| (அ) | மீளாய்வுசெய்யப்பட்ட வருடத்தின் டிசம்பர் 31 ஆம் திகதிக்கு ஒரு பதவிக்காக மேலதிமான ஒன்று இருப்பது அவதானிக்கப்பட்டது. | பணியாட்தொகுதியை அனுமதிக்க வேண்டும். | உள்ளூராட்சி ஆணையாளருக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது. |
| (ஆ) | மீளாய்வுசெய்யப்பட்ட வருடத்தின் டிசம்பர் 31 திகதிக்கு 02 பதவிகளுக்காக 06 வெற்றிடங்கள் காணப்பட்டன. | வெற்றிடங்கள் நிரப்பபட வேண்டும். | உள்ளூராட்சி ஆணையாளருக்கு அறிவுறுத்ப்பட்டுள்ளது. |

3.3 கொள்வனவு

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | கணக்குகொடுக்கும் அலுவலரின் கருத்துரைப்பு |
|---|---|---|
| மீளாய்வு செய்யப்பட்ட ஆண்டிற்காக கொள்வனவு திட்டமொன்று தயாரிக்கப்பட்டிருக்கவில்லை | அனுமதிக்கப்பட்ட வருடாந்த வரவுசெலவு திட்டத்திற்கு அமைவாக கொள்வனவு திட்டமொன்று தயாரிக்கப்பட வேண்டும். | விடயபொறுப்பு உத்தியோகத்தருக்கு அறிவுறுத்தல் வழங்கப்பட்டுள்ளது. |

3.4 <u>முகாமைத்துவத்தின் விணைத்திறன் அற்ற தன்மை</u>

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | கணக்குகொடுக்கும் அலுவலரின் கருத்துரைப்பு |
|---|---|---|---|
| (அ) | ஆந்தா உல்பத்த சந்தை நிலத்தின் வர்த்தக உரித்தை குத்தகைக்கு வழங்குவது தொடர்பான ஒப்பந்தத்தின் 04 ஆவது நிபந்தனைக்கிணங்க செயலாற்றாமையின் காரணமாக மீளாய்வுசெய்யப்பட்ட ஆண்டின் டிசம்பர் 31 ஆம் திகதிக்கு ரூ.833,746 தொகையான வருமானம் அறவிடப்பட்டிருக்கவில்லை. | நிலுவையாகவுள்ள சந்தை குத்தகை வருமானம் அறவிடப்பட வேண்டும். | நீதிமன்றத்தில் வழக்கு தொடர்ப்பட்டுள்ளமை தொடர்பாக குறிப்பிடப்பட்டுள்ளது. |
| (ஆ) | 05 வருடத்திற்கு அதிகமான காலமாக காணப்படுகின்ற செலவு அடிப்படையிலான கடன்கொடுத்தோர் ரூ.136,494 மற்றும் வேலை தொடர்பான கடன்கொடுத்தோர் ரூ.9,799,856 மற்றும் ஏனைய செலவு கடன்கொடுத்தோர் 3,104,365 மொத்தமாக ரூ.13,040,715 தொகையானது குறிப்பிடப்பட்டுள்ளது. | செலுத்த வேண்டிய கணக்கு மிகுதி குறை நீங்கலாக குறிப்பிடப்பிடல் வேண்டும். | உறுதிப்படுத்தலின் பின்னல் முறையான நடைமுறைகளுக்கிணங்க செயலாற்றுமாறு விடய பொறுப்பு அலுவலர்களுக்கு அறிவுறுத்தல் விடுத்துள்ளேன். . |

4. <u>கணக்கீடு தொடர்பான செயலாற்றல் தன்மை மற்றும் நல்லாட்சி</u>

4.1 <u>கணக்காய்வு மற்றும் முகாமைத்து கமிட்டி</u>

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கு கொடுக்கும் அலுவலரின் கருத்துரைப்பு |
|---|---|---|
| முகாமைத்துவ கணக்காய்வு திணைக்களத்தின் சுற்றறிக்கை இல.டி.எம்.ஏ 2009 (01) கொண்ட 2009 ஜூன் 09 கொண்ட சுற்றறிக்கைக்கு அமைய காலாண்டுக்கு ஒரு தடவை கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ கமிட்டி கூட்டத்தை நடாத்த வேண்டுமெனினும் மீளாய்வுசெய்யப்பட்ட வருடத்திற்காக கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ கமிட்டி 03 மாத்திரம் நடாத்தப்பட்டுள்ளது. | சுற்றறிக்கையின் அறிவுறுத்தல்களுக்கமைய கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ கமிட்டி நடாத்தப்பட வேண்டும். | ஒன்றிணைத்து நடாத்தப்பட்ட கமிட்டிகளில் பங்குபற்றப்பட்டுள்ளது. |